REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 22உ வியாழன் (8—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 23உ வெள்ளி (9—12—55) [இதழ் 151

சௌராஷ்டிரத்தில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை?

சௌராஷ்டிரத்தில், பிரெஞ்சு நிறுவனமொன்றின் உதவியுடன் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கு அனுமதி கோரி தொழிலதிபர் ஒருவரிடமிருந்து சௌராஷ்டிரா சர்க்கார் மூலம், பூர்வாங்கத் திட்டங்களுடன் மனு ஒன்று இந்திய சர்க்காரிடம் வந்திருப்பதாக உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

புயல் நிவாரணம்: ரூ. 1,000 தி.மு.க. நன்கொடை

"1,50,000 தி. மு. கழக உறுப்பினரின் அனுதாபம், கண்ணீர் இந்த ரூ. 1,000"

நிதியமைச்சர் சுப்பிரமணியத்திடம் மதியழகன் கொடுத்தார்

" தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கடந்த நவம்பர் கடைசி நாள் ஏற்பட்ட புயல்—வெள்ளக் கொடுமை மிகவும் வேதனையான ஓர் சம்பவம். பெரும் துயர வெள்ளத்தில், துர்ப்பாக்கியத்திற்கு ஆளான அம்மக்கள் மூழ்கிக் கிடக்கின்றனர். அவர்கள் துயர் துடைக்கும் முயற்சியில் சென்னை சர்க்கார் முதலமைச்சர் காமராசர் அவர்களும், மற்ற மந்திரிகளும், அரசாங்க அதிகாரிகளும் எடுத்துக்கொண்டுள்ள போற்றற்குரிய சிரத்தைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இன்றைய கூட்டம், சென்னை ஷெரிப் அவர்களால் புயல்—வெள்ள நிவாரண நிதி திரட்டுவதற்குக் கூட்டப்பட்டுள்ளது. பல்வேறு அரசியல் கட்சியினரும், செல்வந்தர்களும், பல சமூக சேவா சங்கங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு பங்கு கொண்டுள்ளனர். இவர்களது அன்பும், ஆதரவும் வரவேற்கத்தக்கதே யென்றாலும், இன்று ஏற்பட்டுள்ள பரிதாபகரமான கொடுமைக்குப் பரிகாரம் தேடும் சக்தி சர்க்காரிடம்தான் உள்ளது. இதை நான் கூறும்போது, நம்முடைய பங்கினைத் தட்டிக்கழிக்கிறேன் என்று யாரும் கருதிவிடக்கூடாது. சேதத்தின் விளைவான வகையும் தொகையும் அவ்வளவு பெரியது

"இன்னும் சொல்லுவேன்—இதற்குத் தேவையான சக்தி நிதி அமைச்சர் சுப்பிரமணியம் பொறுப்பு வகிக்கும் சென்னை சர்க்காருக்கும் அப்பாற்பட்டது. மத்திய சர்க்கார் மனது வைத்தால் மட்டுமே தமிழரின் மனத் துயருக்கு மருந்திட முடியும். யோசனை சொல்லிவிட்டு ஓடிவிடுபவர்களல்ல நாங்கள். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மாவட்டம் புயலால் பாதிக்கப்பட்டபோது ரூ. 27,000 நிதி திரட்டி, கைத்தறி ஆடைகளாக்கி சென்னை சர்க்காரிடம் ஒப்படைத்து விநியோகிக்கச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் தெரியும்; உங்களுக்கும் தெரியும். அதன் சார்பிலே சொல்லிக்கொள்வேன்—சரியாகவோ, தவறாகவோ, இன்றைய தினம் டில்லியில் உள்ள சர்க்கார், அசாம், பீகார், பஞ்சாப் போன்ற இடங்களில் வெள்ளக் கொடுமை ஏற்பட்டால் மிகுந்த அக்கறையுடனும், தெற்கே, மக்கள் தேம்பித் தவிக்க நேரிடுகிற நேரத்தில் அலட்சியமாயும் அசிரத்தையுடனும் நடந்து கொள்கிறது என்ற கருத்து நிலவுகிறது. இந்தக் கருத்து 'சரி' என்பவர்கள் நாங்கள்; 'தவறு' என்பவர் நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம். அதை நிரூபிப்பதற்காகவாவது, டில்லி சர்க்காரிடம் பெரிய உதவிகளைப் பெறுவதற்கு அவர் போராட வேண்டும். அதற்கு வேண்டிய வாய்ப்பும் வலிமையும் அவரிடம் நிறைய இருக்கிறது. அத்தகைய முயற்சிகளின்மூலமே இந்தத் துயரிலிருந்து நாம் மீள முடியும்.

"பல்வேறு அரசியல் அமைப்பைச் சார்ந்தவர்களும், சமூக சேவை சங்கத்தினரும், மனமுருக்கும் தங்களது ஒத்துழைப்பையும், அனுதாபத்தையும் தெரிவித்தார்கள். இந்தத் தெம்பு நிறைந்த ஆதரவை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. இந்த நல்லெண்ணம்தான், தேம்பித் தவிக்கும் மக்களுக்கு ஆறுதலளிக்கும் அருமருந்தாகும். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னாலான எல்லா ஒத்துழைப்பையும் இதற்கு அளிக்கும். ஏற்கனவே அந்தந்த மாவட்டப் பொறுப்பாளர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர்; இன்னும் தீவிரமாக ஈடுபடுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் ரூபாய் ஆயிரம் கொண்ட இந்தச் செக்கை—இந்த செக், சென்னை முதலமைச்சர் அவர்கள் பெயருக்கு எழுதப்பட்டுள்ளது—நமது நிதிமந்திரி சுப்பிரமணியம் அவர்களிடம் அளிக்கிறேன். இந்தத் தொகை நம் முன்னுலேயுள்ள காரியத்தை நோக்கும் போது சிறியதொகைதான்; இங்கேயுள்ள பல தனவந்தர்களுக்கு மிகவும் இலேசான தொகை; ஆனால், இந்த ஆயிரம் ரூபாய் தனிப்பட்ட ஒருவருடையதல்ல; இதற்குப் பின்னால் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களின் அனுதாபமும், கண்ணீரும் மறைந்திருக்கிறது,"

என்று கூறி, 7-12-65 மாலை 5-80 மணிக்கு, சென்னை, இராஜாஜி மண்டபத்திற்குப் பின்புறமுள்ள சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற புயல்—வெள்ள நிவாரண நிதிக் கூட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்தின் சார்பில், ரூ. 1,000 கொண்ட செக்கை, தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களிடம் அளித்தார்.

தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள புயல்—வெள்ளக் கொடுமைக்குப் பலியான மக்களுக்கு அனுதாபம் தெரிவிக்கவும், நிதி திரட்டவும் சென்னை ஷெரிப் கோதாரி அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்களும், கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தோழர்கள் எம் ஆர். வெங்கடராமன், ப. ஜீவானந்தம் அவர்களும், சென்னை அமைச்சர்கள் பக்தவத்சலம், மாணிக்கவேலர், சென்னை மேயர் திரு. வி. ஆர். இராமநாதய்யர், செட்டி நாட்டரசர் ராஜா முத்தையா செட்டியார், மேரி கிளப்வாலா, வர்த்தக சபைத் தலைவர் எம். ஏ. சிதம்பரம், செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் பு. கிருஷ்ணராவ், மக்கள் சபை உறுப்பினர் எச். டி. ராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தலைமை வகித்த நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் பேசுகையில், புயல்—வெள்ளக் கொடுமை நிவாரண வேலைகளில் சர்க்கார் வேலைகளை விவரித்துவிட்டு, சகலரும் இதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்று குறிப்பிட்டுவிட்டு, நேரு அவர்களுக்கும், பாதுகாப்பு மந்திரி

(4-ம் பக்கம் பார்க்க)

எம்.ஜி.இராமச்சந்திரன் ரூ. 1,000 நன்கொடை

சென்னை, டிச. 8—

புயல்—வெள்ள நிவாரண நிதிக்காக, நடிகத் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ரூ. 1,000 நன்கொடை அளித்துள்ளார்.

இத்தொகையினை, நேற்று சென்னையில் நடைபெற்ற தென் இந்திய நடிகர் சங்கத்தின் 4-வது ஆண்டு முதல் பேரவைக் கூட்டத்தில் அவர், தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவரிடம் தந்திருக்கிறார்.

தம்மைப் போலவே, மற்ற நடிகர்களும், கலைத் துறையில் ஈடுபட்டுள்ள ஏனையோரும் தங்களாலான அளவிற்கு, தங்கள் சொந்தப் பொறுப்பில் நிவாரண நிதி அளிக்க முன்வர வேண்டுமென்று அக்கூட்டத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

'இராஜப் பிரமுகர்' அவசியமாம்!

ஆச்சாரியார் கூறுகிறார்

மைசூர், டிச. 7—

மைசூர் 'இராஜப் பிரமுகர்' பதவியைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரும் இராஜப்பிரமுகர் உறவினர்கள் அடங்கிய குழுவினரிடம் சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பின்வரும் கருத்தைத் தெரிவித்தனர்:—

" மைசூர் 'இராஜப்பிரமுகர்' இல்லாமல், அம்மாநில ஆட்சி முறையை நடத்துவதற்கு முயற்சி செய்வது பெருந்தவறாகும் என்பதே என்னுடைய கருத்தாகும்."

பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் மூலதனம் மறைந்த மாயம்

வேறு நிறுவனங்களின் பங்குத் - தொகைகளாகப் போன விந்தை!

'20,000 டன் மோட்டார் கருவிகள் ரூ.50 லட்சத்திற்கு வாங்கப்பட்டன'

'அதில் 1,000 டன் கருவிகள் மட்டும் ரூ. 94 லட்சத்திற்கு விற்கப்பட்டன'

டால்மியா தொழில் நிறுவனத்தின் மீது மக்கள் சபையில் தாக்குதல்

" இப்போது இருக்கிற சாதாரண சட்டங்களைக் கொண்டு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது; டால்மியா—ஜெயின் கும்பல்கள் நாடு முழுவதிலும் பரந்து கிடக்கின்றன; எனவே, சர்க்காரும் மிக்கத் தைரியத்துடன், கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும்.

"டால்மியா—ஜெயின் ஆதிக்கத்தின் கீழ் இருந்துவருகின்ற மற்றப் பல நிறுவனங்களின் பங்குத் தொகை அனைத்தும் எங்கு செல்கின்றது என்பதை, சபையினர்தான் கண்டு பிடிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வகையில் கூட்டு நிறுவனங்களின் பங்குத் தொகையாக ரூ 8 கோடிக்கும் அதிகமாகவே முடங்கிக்கிடக்கிறது. இந்தப் பணம் எப்படி, எங்கு சென்றுள்ளது என்பதைக் கண்டுபிடிக்கச் சர்க்கார், தேவையானால் தனது சட்டத்தை மாற்றி, திருத்திக்கொள்ளவும் வேண்டும். இதைப் பொறுத்தவரையில் பிரதம மந்திரிக்குத் துணையாக எது வேண்டுமானாலும் செய்ய சபையினர் தயாராக இருக்கின்றனர்

"டால்மியாக்களுக்கும்—ஜெயின்களுக்குமிடையே எவ்வித பிரிவுகளும் கிடையாது; பல நிறுவனங்களைச் சேர்ந்த டைரக்டர்களும் இந்த இரண்டு பிரிவினரிலும் உள்ளவர்களாகவேதான் இருந்துவருகின்றனர்.

" டால்மியா—ஜெயின் நிறுவனங்களுள் ஒன்று, யுத்தக் கால கருவிகள் சேமிப்பிற்காக மோட்டாருக்குத் தேவையான 20,000 டன் சாமான்களை ரூ. 50 இலட்சத்திற்கு விலைக்கு வாங்கிற்று; ஆனால், பின்னர், அதே சாமான்கள் 1,000 டன்னை ரூ. 94 இலட்சத்திற்கு விற்பனை செய்திருக்கிறது; விமானப் போக்கு - வரத்து நடத்த முற்பட்ட டால்மியா நிறுவனம் ஒன்றில்தான் இது நடைபெற்றிருக்கிறது.

" இந்த நிறுவனத்தில் கொள்ளையடிக்கப்பட்ட இப்பெருந் தொகையில் ஒரு சிறு பகுதிகூடப் பின்னர், பங்குதாரர்களுக்குக் கிடைக்காமல் எப்படியோ மறைந்துவிட்டது!

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

இந்தியக் குடியுரிமை மசோதா சிற்சில திருத்தங்களுடன் டெல்லி மக்கள் சபையில் நிறைவேற்றப் பட்டுவிட்டது. இம்மசோதா, அடுத்த ராஜ்யங்கள் சபையிலும் நிறைவேறிய பின்னர், குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்படும்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 8—12—'55 வியாழன்

இரண்டும் ஒன்றுபட வேண்டும்!

தீண்டப்படாதோர் என அழைக்கப்படும் மக்கள், இப் பாரதம் நீங்கலாக உலகில் வேறு எங்கணும் கிடையாது. இந்திய தர்மத்தின் மேல் நிலைக்கு, இத் தீண்டாமையும் சிறந்ததோர் சான்று போதும்!

கடந்த நான்கு தினங்களுக்குமுன், மைசூர் அசோகாபுரி சேரிவாழ் மக்களின் பெருங்கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஜெகஜ்வன் ராம் அவர்கள், தீண்டப்படாதோர் என அழைக்கப்படும் மக்களுக்கு இருந்துவரும் இடுக்கண்கள் குறித்து, வழக்கத்திற்குக் கூடுதலாகக் கடும் வார்த்தைகளை வீசி இருக்கிறார். 'படித்துப் பட்டம் பெற்றத் தீண்டப்படாத மக்களின் பதவி உயர்வைத் தடுத்து நிறுத்தும் கயவர்களை, சித்திரவதை செய்யவேண்டும்' எனக் கடுங்கோபத்துடன் கூறியிருக்கிறார். தாம் பிறந்த குடிக்கு, பிற மக்களால் இழைக்கப்படும் கொடுமைகளை, அமைச்சர் போன்று சுய அனுபவத்தில் அறிந்து தொல்லைகள் பட்டவர்களால்தான் புரிந்துகொள்வது சாத்தியமாகும். மற்றவர்களோ, அமைச்சர் கூறிய 'சித்திரவதை செய்ய வேண்டும்' என்ற சுடுசொல் கண்டு குழம்பவும் செய்வர்—கோபிக்கவும் செய்வர்! வைதிக வெறியர்கள், திருப்பி ஏசவும் முயற்சிப்பர்!

இந்திய அரசாங்க உயர் அதிகாரிகளை நியமிப்பதில், தகுதிபெற்றுள்ள தாழ்த்தப்பட்ட மக்களை வேண்டுமென்றே பொறுக்கி எடுக்காது தடுக்கும் அதிகாரிகளை, பகிரங்கமாக 'சித்திரவதை செய்யவேண்டும்' என அமைச்சர் ஜெகஜ்வன் ராம் அவர்கள் அறிவித்துள்ளார். அத்தகுக் கடுமையான தண்டனையைக் கொடுக்கும் ஏற்பாட்டை சட்டமாக இயற்ற அமைச்சர் முயற்சித்தாராம். அதைத் தவறுடையது என நாம் சொல்ல மாட்டோம். ஆனல், அமைச்சர் ஆத்திரப்படுவதுபோல், தீண்டாதாருக்கு இழைக்கப்படும் கொடுமை கண்டு இந்திய அரசாங்கம் ஆத்திரம் கொண்டிருக்கிறதா என்ருல், அதுதான் இல்லை என்றே வேதனையுடன் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

தீண்டாமைக் கேடுகளைக்களைந்தெறியப்படுவதில் அமைச்சருக்குள்ள ஆவேசத்திலும், ஆர்வத்திலும் நூற்றில் ஒரு பங்கு—இல்லை—ஆயிரத்தில் ஒரு பங்கு இந்திய அரசாங்கத்திற்கு இருந்தாலும்கூட; தீண்டாமைக் கடமையை இதற்குள்ளாக விரட்டி அடித்துவிட்டிருக்க முடியும். 'சித்திரவதை செய்ய வேண்டும்' என்று ஆத்திரமாகக் கூறவேண்டிய கட்டாயம் அக்குடிபிறந்த அமைச்சர் போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கவும் இருக்காது.

அமைச்சரின் காரசாரமான பேச்சுக்கும், சட்டத்திலுள்ளதை எழுத்தும் உணர்வும் துளியும் பழுதுபடாமல் நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு இருக்கும் நல்லெண்ணத்திற்கும் ஆர்வத்திற்கும் மலைக்கும் மடுவிற்குமுள்ள வேற்றுமை இருந்து வருகிறது. இப்போக்கு, தொடர்பற்றத் தன்மை அனைவரும் அறிந்த ஒன்றேயாகும். வெளிப்படையாகத் தெரியும் இம்முரண்பாட்டை ஆத்திரப்படும் அமைச்சரும் அறிந்துதான் இருக்கிருர்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்பாக 'சித்திரவதை செய்ய வேண்டும்' எனக் காரசாரமாகப் பேசி, அம்மக்களின் ஆதரவையும் பாராட்டுதலையும் பெறுவதில் இருக்கும் ஆர்வம், சட்டத்தை ஒழுங்காக நிறைவேற்றி வைக்க வேண்டுமே என்பதில், அமைச்சர் ஜெகஜ்வன்ராம் அவர்களுக்கு இருக்க வேண்டும். ஜெகஜ்வன்ராம் அவர்கள் வெறும் தாழ்த்தப்பட்ட குடிமகன் அல்ல; பொறுப்பான அமைச்சர் பதவியில் இருக்கிருர்; அதிலும், 'சர்வ வல்லமை வாய்ந்த' இந்தியப் பேரரசில் இருக்கிருர். அதுவுமன்றி, தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வைப் பெற்றுப் பேணிக் காத்துவரும் பெயரில் அமைச்சராக இருக்கிருர்.

பெரும் பொறுப்பான இடத்தில் இருக்கும் அவர், 'சித்திரவதை செய்ய வேண்டும்' எனக் கோபமாகக் கூறுவதுடன் தனது சேவைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடாமல், தாழ்த்தப்பட்ட மக்கள் எனப்படுவோரில் படித்துப் பட்டம் பெற்றும், அதற்குரிய தகுதியும் பெற்றிருக்கும் ஒவ்வொருவரும், இந்திய அரசாங்க உயர் அதிகாரியாக நியமனம் பெறுமாறு செய்ய வேண்டும்.

அப்பெரும் பணியைச் செய்யாது, தீவிரமாகப் பேசுவதுடன், தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோருக்கு விமோசனம் தேடிவிட்டதாக அமைச்சர் கருதுவாரானல், அது, அம்மக்களுக்கு வேண்டுமென்றே செய்யும் மகத்தான துரோகம் என்றே சொல்லுவோம். அதுமட்டுமல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்கள், அமைச்சர் போன்ற பதவிக்கு உயர்த்தப்பட்டாலும், வேறு அரசாங்க உயர் அதிகாரங்களில் அமர்த்தப்பட்டாலும், அதன் பலனாக, அச்சமூகம் முழுமைக்கும் ஏற்பட்டுள்ள இழுக்கும் கொடுமையும் என்றென்றைக்கும் நீங்கப்போவது கிடையாது என்றும் கூறுவோம். எனவே, சொல்வதற்கொப்ப செயலும் இருக்க வேண்டும்; அதாவது இரண்டும் ஒன்றுபடவேண்டும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்டது!

இந்தியரயில்வேக்களில் 1947-லிருந்து 1955 அக்டோபர் வரையில் புதிதாக மொத்தம் 4,939 பிரயாணப் பெட்டிகள் சேர்க்கப்பட்டன; அவற்றில் 4,455 பெட்டிகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை.

அணுகுண்டு உற்பத்தி: பிரிட்டன் கைவிடாதாம்!

'யுத்தத்தைத் தடுக்கும் சக்தி அதுவே' என்கிருர் அந்தோனி ஈடன்

லண்டன், டிச. 6—

“நீர்வளிக் குண்டுகளை உற்பத்தி செய்வதென்ற முடிவை பிரிட்டன் மாற்றிக்கொள்ளப் போவதில்லை. இத்தகுக் குண்டுகளை உற்பத்திசெய்வதும், கையிருப்பில் வைத்துக் கோள்வதும் கூட யுத்தத்தைத் தடுக்கும் ஒருவகை 'சக்தி'யாக இருக்கும் என்றே பிரிட்டன் நம்பிக் கோண்டிருக்கிறது.”

என்று, பிரிட்டன் பிரதமர் அந்தோனி ஈடன், பிரிட்டன் மக்கள் சபையில் கூறியிருக்கிருராம்!

“உலக முழுமைக்குமான பாதுகாப்புக்கு உதவும் எல்லா ஏற்பாடுகளையும் பிரிட்டிஷ் சர்க்கார் வரவேற்கவே செய்யும்; ஆனல், மற்ற வல்லரசுகளைவிட தாழ்வான நிலையில் பிரிட்டனை வைக்கக்கூடிய எவ்வகையான ஏற்பாட்டினையும் பிரிட்டன் ஏற்றுக்கொள்ளாது. விஞ்ஞான அறிவு முதிர்ச்சியும், வசதிகளும் கொண்டிருக்கிற நமக்கு அது ஏற்ற ஒன்றும் அல்ல”

என்றும், அவர் மேலும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

ஆசியாவில் அணு ஆராய்ச்சி நிலையம்!

அமெரிக்கா திட்டம் தீட்டுகிறது

வாஷிங்டன், டிச 6—

ஆசியாவில் ஒரு அணு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த அமெரிக்கா உத்தேசித்திருக்கிறது என்றும், எந்த இடத்தில் அதனை நிறுவுவது என்பது முடிவாகத் தெரிவிக்கப்படவில்லையென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

அனேகமாக இரண்டொரு தினங்களில் இது குறித்த முடிவு தெரிந்துவிடும் என்று அமெரிக்க அரசாங்க அமைச்சர் ஜான் பாஸ்டர் டல்லஸ் கூறியிருப்பதாகவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் விவரம் காணப்படுகிறது.

இந்த அணு ஆராய்ச்சி நிலையத்தை இலங்கை, அல்லது பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் ஏதாவது ஒன்றிலேயே ஆரம்பிப்பதா, அல்லது ஜப்பானில் நிறுவுவதா என்ற பிரச்சினைகள் தற்போது அமெரிக்க சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

சிங்கப்பூருக்கு முழு விடுதலை

டேவிட் மார்ஷல் உறுதி

புதுடில்லி, டிச. 6—

“சிங்கப்பூருக்கு சுயாட்சி உரிமை பெறுவதற்கென நாங்கள், '1957 ஏப்ரல் திங்கள்' என்று கால நிர்ணயம் செய்திருக்கிறோம்; நாங்கள் இலண்டன் செல்வது இதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்குத்தான்,”

—என்று, சிங்கப்பூர் முதன் மந்திரி டேவிட் மார்ஷல் இங்கு தெரிவித்திருக்கிருர்.

'சிங்கப்பூருக்கு முழுச் சுதந்திரம் எப்போது கிடைக்கும்?' என்று கேட்கப்பட்டபோது மார்ஷல் குறிப்பிட்டதாவது :—

“சென்ற ஆண்டில், நான் சிங்கப்பூர் முழு விடுதலைபெற பத்து ஆண்டுகள் ஆகலாம் என்று குறிப்பிட்டிருந்தேன்; ஆனல், பாண்டுங் மாநாடு, கொழும்புத் திட்ட மாநாடு இவற்றைக் கண்ட பிறகு, சிங்கப்பூருக்கு இன்னும் சீக்கிரமே விடுதலை கிடைக்கக் கூடும் என்ற நம்பிக்கை தோன்றியுள்ளது.

“இந்த மாநாடுகளில், அருகில் இருக்கும் நாடுகள் மட்டுமின்றி காமன்வெல்த்தில் இல்லாத வெகு தொலைவிலிருக்கும் நாடுகள் கூட சிங்கப்பூருடன் நட்புறவு கொண்டிருக்கின்றன. இந்த நட்புறவு வளர்ச்சியினல், சிங்கப்பூர் இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவே முழு விடுதலைபெற முடியும் என்று நம்புகிறேன்.”

டில்லிக்குப் புறப்படுமுன் பம்பாயில் பத்திரிகையாளர்களிடையே பேசுகையில், 'சிங்கப்பூர் எதிர்க்கட்சியினர் நான் ஒரு கூட்டுறவு சர்க்கார் அமைக்கவேண்டும் என்றும், இன்றேல் பதவியிலிருந்து விலகவேண்டும் என்றும் கோருவதற்கு நான் இணங்கப்போவதில்லை' என்றும் தெரிவித்திருக்கிருர்.

மேலும், 'இப்போது சிங்கப்பூரில் ஜனநாயகம் நடைமுறையிலிருக்கவில்லை; ஜனநாயகத்திற்காகத்தான் நான் போராடிக் கொண்டிருக்கிறேன்' என்றும், குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும், தான் சிங்கப்பூர் பற்றிக் குறிப்பிட்டது மலேயாவிற்கும் பொருந்தும் என்றும், தன்னைத் தொடர்ந்து மலேயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரெஹ்மான் லண்டன் செல்லவிருக்கிருர் என்றும் மார்ஷல் குறிப்பிட்டிருக்கிருர்.

'யாசகம் அல்ல நாம் கோருவது; உரிமையைக் கேட்கிறோம்'

மலேயா சுதந்திரம் குறித்து அப்துல் ரஹ்மான்

கோலாலம்பூர், டிச. 6—

“மலேயாவிற்கு சுதந்திரம் பெறுவதற்காகப் பிரிட்டிஷ் சர்க்காருடன் சேச்சுவார்த்தை நடத்துவதற்கென லண்டன் செல்லவிருக்கும் நான், 'பிச்சைப் பாத்திரம்' ஏதும் ஏந்திச் செல்லவில்லை.

“உரிமைப்படி நமக்குச் சொந்தமான விடுதலையை திரும்பத் தருமாறு கேட்கப்போகிறோம்,”

—என்று, மலேயா 'பெடரல்' சட்டசபையில் வரவு - செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்து பேசிய முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான் குறிப்பிட்டிருக்கிருர்.

“அடுத்த சனவரியில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் போது சில சிக்கல்கள் சுமூகமாக—திருப்திகரமாகத் தீர்க்கப்படுமானல், ஏற்கனவே நிர்ணயித்தபடி, இரண்டாண்டுகளுக்குள்ளாக மலேயாவிற்கு சுயாட்சி கிடைத்துவிடும்” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

அவர் பேசும்போது, ஒவ்வொரு முறையும் உறுப்பினர்கள் பெருத்த ஆரவாரப் பேரொலி எழுப்பி அவர் கருத்தை வரவேற்றிருக்கின்றனர்.

“பிரிட்டிஷ் சர்க்காருக்கும் நமது கட்சிக்கும் பரஸ்பரம், நன்னம்பிக்கை இருந்து வந்திருக்கிறது; இந்த உணர்வுடன்தான் நாம் மலேயா சுதந்திரம் பற்றிப் பேச முடியும்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

மலேயா கம்யூனிஸ்டுத் தலைவரான சின்-பெங்குடன் தான் சமரசம் பேசப்போவதில்லை என்றும், இந்தத் திங்கள் இறுதியில், தான் அவரைச் சந்திக்கும்போது உருவான முடிவு ஏதும் ஏற்படாவிட்டால் மேலும் என்ன செய்வது என்று கட்சியினர் பரிசீலிப்பர் என்றும், பொது மன்னிப்பு வழங்கும் நிபந்தனைகளை இன்னும் தளர்த்துவது பற்றியும் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

“லண்டனிலிருந்து திரும்பியதும், மலேயா சுதந்திரம் பெறும் நாளை நான் உங்களுக்குக் குறித்துத் தரமுடியும்; இது முடியாது போனல், மலேயாவில் நிலையற்ற தன்மை நீடித்து பெரும் குழப்ப உணர்வை வளர்க்கும்; அந்த உணர்வு மிக ஆபத்தான உணர்வாகும். மக்கள் தங்கள் இலட்சியம் தோற்கடிக்கப்படுவதைப் பொறுத்துக்கோள்ளும் இயல்பினராயில்லை,”

என்றும் ரஹ்மான் குறிப்பிட்டிருக்கிருர்.

35,000 ஆலைத் தொழிலாளருக்கு ரூ. 20 லட்சம் போனஸ்

ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர்கள் சங்கமும், ஆலை முதலாளிகள் சங்கமும் செய்துகொண்டுள்ள ஐந்தாண்டு போனஸ் ஒப்பந்தம் ஒன்றின்படி, ஆமதாபாததிலுள்ள 30 நெசவு ஆலைகளைச் சேர்ந்த 35,000 தொழிலாளர்கள், 1954-ம் ஆண்டுக்காக ரூ. 20,00,000 வரை போனஸ் பெறுவர் என்று தெரிய வருகிறது.

'ரஷ்ய தலைவர்கள் பேச்சு: சிறுபிள்ளைத்தனமான—முட்டாள்தனமாகும்'

பிரிட்டிஷ் மந்திரியின் சீற்றம்

நியூயார்க், டிச. 6—

“'பிரிட்டன் உங்களைக் காட்டுமிராண்டிகள் என்று கருதுகிறது' என்று, பர்மாவில் கம்யூனிஸ்டுகள் மேற்கு வல்லரசுகளை ஏசியிருப்பது சிறுபிள்ளைத்தனமான முட்டாள்தனமாகும்,”

என்று, பிரிட்டிஷ் வெளி விவகாரங்களுக்கான அரசாங்க மந்திரி அந்தோனி நட்டிங் இங்கு கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

“பிரிட்டனும், பிரான்சும் சென்ற யுத்தத்தைத் துவக்கின; இந்த முறை அமெரிக்கா மீண்டுமோர் யுத்தத்தைத் துவக்கும்; உங்களைப் பிரிட்டிஷார் காட்டுமிராண்டிகள் என்று கருதுகின்றனர்; காலனி, ஏகாதிபத்திய போர் வெறியர்களிடமிருந்து விடுதலை பெறுங்கள்,”

என்ற ரஷ்யத் தலைவர்கள் பேச்சு, மேற்கத்திய வல்லரசுகளை அவர்கள் தூற்றியிருப்பதற்கு சில உதாரணங்களாகும்—என்றும் அந்த மந்திரி குறிப்பிட்டுக்காட்டியிருக்கிருர்.

மத்திய சமூக நல போர்டு, சமூக சேவை நிறுவனங்களுக்கு இது வரையில் மொத்தம் 2,787 மானியங்கள் வழங்கியிருக்கிறது; இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ள தொகை மொத்தம் ரூ. 75,89,726 ஆகும்.

கழகச் செய்திகள்

குள்ளக்காபாளையம் தி. மு. கழகம்

11—11—55 இரவு 8 மணிக்கு, கிளைக் கழகக் கட்டிடத்தில் தோழர் நடராசு தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாசர்புரத்தில் தி. மு. கழகத் துவக்கம்

20—11—55-ல், திருக்கோவிலூரை அடுத்த தாசர்புரத்தில், தோழர் டி. இ. கண்ணன் தலைமையில் தி. மு. கழகக் கிளை துவக்கி வைக்கப்பட்டு கொடியேற்றி வைக்கப்பட்டது. கிளைக் கழக உறுப்பினர்கள் 25 பேரும் சேர்ந்து, தோழர்கள் வி. நடராசன், டி. தனராசன் ஆகியோரை செயலாளராகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுத்தனர்.

திருவில்லிப்புத்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

20—11—55 மாலை 7 மணிக்கு, நகரக் கிளை சார்பில், நாயர் சதுக்கத்தில், தோழர் மா. குருசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் சொற்பொழிவாற்றினர்.

* * *

27—11—55 மாலை 6 மணிக்கு, கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் சி. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கடந்த திங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்கள், மாநில மாநாடு நிதி வசூல் வரவு - செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டும், தேவிகுளம், பீர்மேடு, பகுதிகளை சென்னை மாநிலத்தோடு இணைக்கவேண்டுமென்றும், எஞ்சியுள்ள சென்னை மாநிலத்தை 'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொன்மலை — மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

22—11—55 மாலை 7 மணிக்கு; கழக இல்லத்தில், தோழர் கே துரைராஜ் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், 1—7—55 முதல் 22—11—55 முடிய உள்ள கழக வரவு - செலவு கணக்குகள் சரிபார்த்து ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பம்பாய்—தாராவி தி. மு கழகம்

24—11—55 இரவு 7½ மணி அளவில் தாராவி கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் திராவிட நகத்தில், தோழர் பி. எஸ். செல்லையா தலைமையில் நடைபெற்ற போது, 'புரட்சிப் பெண்' நாடகம், 'முயற்சி' சிறப்பு மலர் பாக்கிகளைச் செலுத்தாத தோழர்கள் 12—12—55-க்குள் செலுத்திவிட வேண்டுமென்றும், செலுத்தாத தோழர்களுடைய பெயர்களை செலுத்தவேண்டிய பாக்கித் தொகையுடன் அண்மையில் வெளியிடவிருக்கும் கழக வரவு-செலவு அறிக்கையில் வெளியிடுவதெனவும், தோழர் கண்ணதாசன் பம்பாய் வருகையின்போது ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சங்கரபாண்டியபுரம் தி.மு. கழகப் பொதுக் கூட்டம்

29—11—55 மாலை 6 மணிக்கு தோழர் கே. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எம். எஸ். இராமசாமி, டி. கே. கே. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களுக்கு சங்கரபாண்டியபுரம், சமுசிகாபுரம், சத்திரப்பட்டி ஆகிய ஊர் தோழர்களால் கைத்தறி ஆடைகளும், நூல் சிட்டம் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

சேவூர் (வ. ஆ. மா.) தி. மு. கழகம்

29—11—55 மாலை 6 மணிக்கு, கழக நிலயத்தில், தோழர் வி. இ. செயராமன் தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில் பொங்கல் விழா பொதுக்கூட்டத்தை 28-1-56-ல் சிறப்புற நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கல்லக்குடி தி. மு. கழகம்

4—12—55 காலை 9½ மணிக்கு கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கோவிந்தன் இல்லத்தில், தோழர் கே எம். ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்ற போது, தோழர்கள் செங்குட்டுவன், கந்தசாமி, வரதராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 8-வது வட்ட தி. மு. கழகம்

26—11—55ல், சென்னை முத்துகிருஷ்ணன் தெரு, எண். 8 இல்லத்தில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கிளைக் கழக உறுப்பினர் தோழர் என். வி. நடராசன் அவர்களைத் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தமைக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், ஜனவரி திங்களில் திராவிடர் திருநாளையும், அத்துடன் மாநில மாநாட்டு நிதி அளிப்பு விழாவையும் சிறப்புறக் கொண்டாடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை—37-வது வட்ட தி. மு. கழகம்

29—11—55 இரவு 8 மணிக்கு தோழர் ஏ. எல் கே. சாமி தலைமையில் கழகப் பணிமனையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கிளைக் கழகச் செயலாளர் தோழர் கோ. இளவரசு பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்தும், பொருளாளர் தோழர் மு. அரங்கநாதன் கொடுத்த விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, தோழர் பொ. ஏழுமலை அவர்களிடம் பொருளாளர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டும் கிளைக் கழக ஆண்டு விழாக் கூட்டத்தை அடுத்துக்கூடும் செயற்குழுவில் முடிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன், ஐந்து மாத வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழு முடிவுகள்

பம்பாய் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டம் 27—11—55 காலை 11-30 மணியளவில், பம்பாய்—சயன் தோழர் அன்புச்செழியன் இல்லத்தில், பொதுச் செயலாளர் எஸ் தியாகராசன் தலைமையில் கூடியது.

பொதுக் குழுவில் தாராவி, மாதுங்கா, அந்தேரி, மான்கூர்டு, கொலாபா, ஆகிய கிளைக் கழகச் செயலாளர்களும், பிரதிநிதிகள் தோழர்கள் பி. எஸ். செல்லையா, மா. இரா. குறள்தாசன், ஏ. எல். பெருமாள், இ. சு. ச. பிச்சையா, எஸ். முத்து, இரா. தஞ்சைத்துரை, வி. இராமு, த மு. பொற்கோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாமை குறித்து வருந்தியும், எடுக்கும் முடிவுகளை ஆதரிப்பதாகவும் கழகத் துணைச் செயலாளர் யோ. தர்மராசன், தாராவி கிளைச் செயலாளர் தோழர் எம். இராசகோபாலன் ஆகியோர் முடங்கல் தீட்டியிருந்தனர்.

பம்பாய் தி. மு. கழகத் தலைமை நிலையப் பணிமனை அமைப்பதற்கு நன்கொடை பிரிக்க புத்தகம் பெற்றுச் சென்றவர்கள் உடனடியாக அதற்குரிய தொகையை வசூலித்துச் செலுத்திவிடுமாறும், கட்டணப் பாக்கி வைத்திருக்கும் கிளைக் கழகங்கள் திங்கள்தோறும் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

1955 சனவரியிலிருந்து அக்டோபர் முடியவுள்ள கிளைக் கழக வரவு - செலவுக் கணக்குகளின் தணிக்கை அறிக்கைகளை அடுத்த பொதுக் குழுவில் சமர்ப்பிக்கவும், பாண்டுப் கிளைக் கழகத் தணிக்கை அறிக்கை மட்டும் படித்தும் காண்பிக்கப்பட்டது.

கழகப் பணி புரிவதற்கு வாய்ப்பில்லாததையொட்டி துணைச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள விரும்புவதாக தோழர் யோ. தர்மராசன் அவர்கள் கொடுத்த விலகல் கடிதம் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டு, தேர்தலுக்கு இன்னும் ஒரிரு திங்களேயுள்ளமையால் தொடர்ந்து அதுவரை பொறுப்பு வகித்துவரக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

'சிந்தனை'யையெழுத்து வெளியீட்டின் நிர்வாகியாக இரா. மா. சண்முகராசன், பம்பாய் வெளியீட்டாசிரியராக த. மு. பொற்கோ, ஆமதாபாத் வெளியீட்டாசிரியராக இரா. வளர்மதி ஆகியோர் நியமிக்கப்பட்டது அங்கீகரிக்கப்பட்டது.

தோழர் கண்ணதாசன் அவர்களின் பம்பாய் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளும் ஒத்துக்கொள்ளப்பட்டன.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர் திரு. இருதயராஜ், காந்தவல்லி தி. மு. கழகத் தோழர் து. சே. அருணசலம் அவர்களின் செல்வன் சேரன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

"அண்மையில் வெளியான மாநிலச் சீரமைப்புக் குழுவின் அறிக்கை குறித்து தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் அறிக்கைக் கிணங்க, ஆவன செய்யுமாறு மத்திய அரசியலாரை இப்பொதுக் குழு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

"தேவிகுளம்-பீர்மேடு - சித்தூர்—நெய்யாற்றங்கரை ஆகிய பகுதிகளை முறையாகத் தமிழ் மாநிலத்துடன் இணைக்கவேண்டுமென்பதுடன், 'சென்னை மாநிலம்' என்ற பெயரை மாற்றி 'தமிழகம்' அல்லது 'தமிழ் நாடு' எனப் பெயரிடுமாறு இப்பொதுக் குழு அரசியலாரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

"பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மராட்டிய மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற நேர்மையான கோரிக்கையை இப்பொதுக்குழு வரவேற்பதுடன் அதற்காவன செய்ய மத்திய அரசியலாரை இப்பொதுக்குழு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

வேறு பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்ட பின்னர் தலைவர் முடிவுரையில் கழகப் பணிகள் குறித்தும், நாம் ஆற்றவேண்டிய செயல் முறைகள் குறித்தும் பேசி அனைவருக்கும் நன்றி கூறினர்.

நிலக்கோட்டையில் மதுரை மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

"15-12-55 மாலை 3 மணிக்கு, நிலக்கோட்டையில், மதுரை மாவட்ட தி. மு. கழகக் கூட்டம், தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும். அதுபோது, பொதுக்குழுவிற்கு மேலும் ஒருவர் தேர்ந்தெடுத்தல், வட்டக் கழகம் அமைத்தல், உறுப்பினர்கள் சேர்த்தல் ஆகியவை ஆய்வுக்கு வரும். மாவட்டக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறுது வர வேண்டுகிறேன்," என்று, மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அறிவிக்கிறார்.

கடலூர் (ஓ. டி.) 2-வது வட்ட தி. மு. கழகம்

23—11—55 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் எஸ். அஜீஸ் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், கடலூர் பழைய நகர் தி. மு. கழகச் செயலாளர் தோழர் கி. கோவிந்தராசன் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டது குறித்து அவரது தொண்டினைப் பாராட்டி, அன்னருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டும், இரண்டாண்டுகளுக்கு முன் கடலூர் பழைய நகரில், தி. மு. கழகத்தின் வளர்ச்சியைக் கண்ட எதிர்க்கட்சிக்காரர்கள் காலிகளை ஏவி, தோழர் கி. கோவிந்தராசன் அவர்களை தாக்கி காயப்படுத்தியதுமல்லாமல், அன்னர் வாழ்க்கைக்கு வசதியாக இருந்த செல்வம் உணவு விடுதியையும் உடைத்து ரூ. 700-க்கு மேல் நட்டப்படுத்தியதையொட்டி, அன்னருக்கு ரூ. 500 தருவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், அதற்காகச் சென்ற ஆண்டு பொங்கல் விழாவில் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டும், இதுவரை தோழர் கி. கோவிந்தராசன் அவர்களுக்கு உதவி நிதி கொடுக்கப்படாதது கண்டு வருந்துவதுடன் இந்த ஆண்டு நடத்தப்போகும் பொங்கல் விழாவில் தோழர் கி. கோவிந்தராசன் அவர்களுக்குக் கண்டிப்பாக ரூ. 500 உதவி நிதி கொடுத்துவிட வேண்டுமென நகர தி. மு. கழகத்தைக் கேட்டுக்கொண்டும், கடலூர் நகர தி. மு. கழகம் இந்த ஆண்டு நடத்தப்போகும் பொங்கல் விழாவிற்கு கடலூர் பழைய நகர் 2-வது வட்டம் தி. மு. கழகத்தின் சார்பில் ரூ. 30 நன்கொடையளித்து, பொங்கல் விழாவை சிறப்பிப்பதென்றும், பொங்கல் விழாவையொட்டி கடலூர் பழைய நகரில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தித்தர நகர தி. மு. கழகத்தைக் கேட்டுக் கொண்டும், பொங்கல் விழாவிற்கென கழகத் தோழர்கள் நிதியளிக்கும்படி 2வது வட்ட தி மு கழகக் கிளை சார்பில் வேண்டிக்கொண்டும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

தாத்தையங்கார் பேட்டையில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

25—11—55 மாலை 6 மணிக்கு, சந்தைத் திடலில், தோழர் டி. கே. கும்பையா தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் மு. பெ. முத்துக் கருப்பன், கே. வி. கே. ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * *

4—12—55-ல் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் எம். எஸ். என். இராசன் தலைமையில் நடைபெற்றபோது பேராசிரியர் ஏ. இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டதுடன், 25—11—55-ல் நடந்த பொதுக்கூட்ட வரவு-செலவு கணக்குகளும் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

பெங்களூர் மாவட்ட தி. மு. க. செயற் குழு

4—12—55 காலை 11 மணிக்கு கோலார் தங்கவயல் ஆண்டர்சன் பேட்டை தி. மு. கழக இல்லத்தில் பெங்களூர் மாவட்டச் செயற் குழுக் கூட்டம் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்றது. அதுபோது 25-12-55 அன்று நடைபெற இருக்கும் மாநில மாநாட்டு நிதிக் கூட்டத்தை ராபட்சன்பேட்டை தி. மு. கழகக் கிளை நடத்துவதற்கு அனுமதி அளித்தும், மாநில மாநாட்டு நிதியாக ரூ. 150 தரவேண்டுமென்றும், கோலார் தங்கவயலில் உள்ள பல கட்சிகளுடன் பொது வேலைகளில் தி. மு. கழகம் கலந்து கொள்ளுமேயானால், அதை உடன் மாவட்டக் கழகத்திற்குத் தெரியப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டது.

அன்று மாலை 4 மணியளவில், தோழர் எம். கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் நெடுஞ்சேரலாதன், அன்பன், கே. ஜி. கோபாலகிருட்டிணன், ஏ. டி. பிரான்சிஸ், மா. மன்னர் ஆகியோர் 'நமது கடமை' என்ற தலைப்பில் அறிவுரையாற்றினர்.

செங்கற்பட்டு மாவட்டக் கழக உறுப்பினர் கூட்டம்

27—11—55 காலை 11-30 மணிக்கு, காஞ்சீபுரம் 'திராவிட நாடு' நிலயத்தில், தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக உறுப்பினர் கூட்டத்தில், மதுராந்தகம் தி. மு. கழகத் தோழர்களால், 'தி. மு. க. கட்டிட நிதி' என்ற பெயரால் நடத்தப்பட இருக்கும் நாடகம் மாவட்டக் கழகத்தின் அனுமதி இல்லாமல் நடத்தப்படுவதாலும், மாநில மாநாட்டின் பங்குத் தொகையைக் கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாலும், இது சம்பந்தமாகப் பொதுச் செயலாளரைக் கண்டு பேசி தக்க நடவடிக்கை எடுக்க மாவட்டச் செயலாளருக்கு அதிகாரமளித்தும், காட்டுப்பாக்கம் தோழர் டி. இராசரத்தினம் அவர்களை பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும், அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் பழைய வரவு-செலவு கணக்குகளை ஒப்புவிக்க வேண்டுமெனவும், அக்கூட்டத்தை குன்றத்தூரில் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

புதுவை — அரியநகர் தி. மு. கழகம்

கழகத் தோழர் பெயர் மாற்றம்

28—11—55ல் புதுவை அரியநகர் கழகத்திற்கு அண்ணா அவர்களும், பொதுச் செயலாளரும் வந்தபோது, அக் கழக உறுப்பினரான தோழர் இராமகிருஷ்ணன் என்பவர், தம் பெயரை மாற்றிக் கொள்ள விரும்பியதால், பொதுச் செயலாளர் அவர்கள் அவருக்கு 'நெடுமாறன்' என்று பெயரிட்டார் இதன் நினைவாக அத் தோழர் 64 காலணுக்கள்கொண்ட ஒரு முடிப்பை, மாநில மாநாட்டு நிதிக்காக அளித்தார்.

கரும்புப் பயிர்களுக்கு உரம்

திருச்சி, டிச. 6—

சென்னை மாநில சர்க்கார், கரும்புப் பயிர்களுக்குத் தீவிர உரமிடும் திட்டமொன்றினை அனுமதித்துவிட்டனர் என்றும், இத் திட்டத்திற்காக, திருச்சி மாவட்டத்திற்கு மட்டும் ரூ. 2 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதென்றும் தெரிய வருகிறது

ஏகர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம், உயர்ந்தபட்ச அளவு ரூ. 500 வரையிலும் 5¼ சதவிகித வட்டியில் கடன் வழங்கப்பெறும் என்றும் ஒரு வருட காலத் தவணைக்குள் கடன் திருப்பித் தரப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை அரசாங்கக் கோரிக்கைகள் அனுதாபத்துடன் கருதப்படுமாம்!

டில்லி அமைச்சரின் தாராளம்

புதுடில்லி, டிச. 7

"சென்னை மாநிலத்தில் புயல், மழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டு அல்லலுறுவோருக்கு உதவுவதற்காக, மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டுள்ள சென்னை மாநில சர்க்காரின் வேண்டுகோள்கள் அனைத்தும், மிக அனுதாபத்துடன் கவனிக்கப்படும்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகத்திற்காக, சென்னை மாநில சர்க்காருக்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அந்த அளவு உணவுப் பொருள்களை மத்திய உணவுக் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் சென்னை சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில், செலவாகக்கூடிய தொகையில் 50 சதவிகிதத்தை —ரூ. 2 கோடி வரைக்கும் மத்திய சர்க்காரே ஏற்றுக் கொள்ளும்."

என்று, மத்திய உணவு மந்திரி ஏ. பி. ஜெயின் கூறியிருக்கிறாரென செய்தி ஒன்று கூறுகிறது.

பாதிக்கப்பட்டோருக்கு உணவு விநியோகிப்பதற்கு 5,000 டன் அரிசியை அவசரமாகத் தந்து உதவுமாறு மத்திய சர்க்காரை சென்னை சர்க்கார் கேட்டிருந்தனர். அதற்குப் பதில் தரும் வகையிலேயே மத்திய சர்க்கார், 'மாநில சர்க்காருக்கு எவ்வளவு தேவையோ அதனைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று தெரிவித்திருக்கின்றனர் என்றும், இந்த முடிவு திட்டக் குழுவுடனும், மத்திய சர்க்கார் உணவு, விவசாய இலாகாவுடனும் மத்திய சர்க்கார் கலந்தாலோசித்த பின்னர் மேற்கொள்ளப்பட்டது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதுவரையிலும் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பது தெரிவிக்கப்படவில்லையென்றும், மத்திய சர்க்கார் மேற்கொண்டு இந்த நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்கு இந்த மதிப்பீடு உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டியது அவசியம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

இதனிடையில் சென்னையைச் சேர்ந்த பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும், தங்கள் மாநிலத்தில் புயலால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கச் செய்வதில் பிரதமர் தாராளமான உதவி அளிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பண்டித நேருவுக்குக் கடிதம் ஒன்றும் வரைந்திருக்கின்றனர்.

சீரழிவுச் செய்தி

புயலினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம், தஞ்சை, அறந்தாங்கி, வேதாரண்யம், திருவாடானை ஆகிய பகுதிகளில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் பற்றி வந்துகொண்டிருக்கும் செய்திகள் எவரையும் திடுக்கிடச் செய்யாதிருக்க இயலாது.

அறந்தாங்கியில் 'அழிவு'க் கோலம்!

அறந்தாங்கி பற்றிய முதல் முதலாவதாகக் கிடைத்த செய்திகளின் படி—அங்கு 200 பாசன ஏரிகள் உடைந்தன; 20,000 ஏகர் பயிர்கள் நாசமாயின; 10,000 மாடுகள், 80,000 வெள்ளாடுகள் மாண்டன; இவைகளில் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 7½ இலட்சமிருக்கும்; நகரில் மட்டும் வீடுகள் இடிந்ததால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 16½ இலட்சம்; கிராமங்களில் ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள வீடுகள் இடிந்தன என்று தெரியவருகிறது.

வேதாரண்யத்திலிருந்து வேதனை தரும் செய்திகள்

இப்பகுதியில் கடல் நீர் உள்ளே புகுந்ததால் விளைந்துள்ள நாசங்கள் எடுத்திடம்ப இடலாத அளவில் உள்ளது; 10 அடி உயரத்திற்கு எழுந்த கடல் அலைகள் மண் வீடுகளையெல்லாம் அடித்துக் கொண்டு சென்றுவிட்டதாம்; நினைவுச் சின்னத்திருக்கூட ஒன்றும் கிடையாதாம்!

75,000 மணங்கு 'சேமிப்பு' உப்பு முழுமையும் கடலுடன் கலந்துவிட்டதென்றும், ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள புகையிலை நஷ்டமாயிற்றென்றும் கூறப்பட்டுள்ளது.

பலியானோர்

வேதாரண்யத்தில் 7-ந் தேதி காலை வரையில் 262 பிணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாகவும், 100 குழந்தைகள் தண்ணீரில் மூழ்கியிருக்கலாமெனவும் கூறப்பட்டிருக்கிறது. அதிகாரத் தோரணையில், 200-லிருந்து 300 பேர் மாண்டிருக்கக்கூடுமென செய்திகள் கூறுகின்றன

திருவாடானையில் 150 பேர் பலியாகியிருக்கக் கூடுமெனத் தெரியவருகிறது.

நாசத்தின் எல்லை

திருவாடானையில், எல்லா ஏரிகளிலும் உடைப்பு ஏற்பட்டு, 40,000 ஏகரா நெற்பயிரும், 8,000 ஏகரா வரகுப் பயிரும் வெள்ளத்தில் மூழ்கியிருக்கிறதாம். ரூ 50 இலட்சத்திற்கு சொத்துச் சேதம் ஏற்பட்டுள்ளதாம்; 5,000 கால்நடைகள் மாண்டிருக்கக்கூடுமாம்.

சீர்காழி தாலுகாவில் சுமார் 1,000 ஏகரா நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறதாக செய்தி ஒன்று கூறுகிறது.

திருத்துறைப்பூண்டியில் 700 ஏகரா நஞ்சைப் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியிருக்கிறதென்றும், 1,300 கூரை—ஓட்டு வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

விருதுநகரில் 600 மண்வீடுகள் வீழ்ந்துவிட்டனவாம்.

இராமநாதபுரம்— ஏக்கம் தரும் நிலை

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 26 கிராமங்களில் புயல்—வெள்ளத்தினால் 180 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவாம். 200 கால்நடைகள் மடிந்திருக்கக் கூடுமாம். ஒரு பகுதியில் மட்டும் 800 வீடுகள் நாசமாயிற்றாம்; ரூ. 80 இலட்சத்திற்குமேல் சொத்து நாசம் ஏற்பட்டிருக்குமாம்.

தென்னை, வாழை, கரும்பு ஆகியவை அடி பெயர்ந்து உள்ளனவாம்

கடந்த 5 நாட்களாக வெளியுலகுடன் தொடர்பற்றுள்ள இராமநாதபுரத்தில் முதலமைச்சர் காமராசரும், அவர் தம் குழுவினரும், வெகு சிரமத்துடன் அங்கு போய்ச் சேர்ந்துள்ளனர்.

சென்னை சர்க்காரால், எல்லா விதமான நிவாரண முயற்சிகளும் முழு மூச்சுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலைகள் சில, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென துணிகளை அனுப்பி வருகிறது.

நிதி திரட்டும் பணி தீவிரமாக நடைபெறுகிறது.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், நிவாரண நிதிக்கென ரூ 1,000 வழங்கியுள்ளார்.

1955 (ஆகஸ்ட் கடைசி வரையில்) மொத்தம் சுமார் ரூ. 5,22,00,000 மதிப்புள்ள தேசீயத் திட்டப் பத்திரங்கள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன.

கழகக் கூட்டம்

★

ஈரோடு

ஜின்னு மைதானத்தில்

10-12-55 மாலை 5½ மணிக்கு

பேசுவோர்:

என். வி. நடராசன்

எஸ். அப்பாவு

சென்னை 42-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

9—12—55 இரவு 9 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் (எண் 4, சமசிவாய முதலி தெரு, திருவல்லிக்கேணி) நடைபெறும். அதுபோது, புயல் நிவாரண நிதி திரட்டுவது பற்றி ஆலோசிக்கப்படும்.

கண்ணதாசன்

பம்பாய் நிகழ்ச்சிகள்

டிச. 24 பம்பாய் வருகை
25 ஆமதாபாத் நிகழ்ச்சிகள்
26 பம்பாயில் ஓய்வு
27 கோரேகான்
28 கொலாபா
29 அந்தேரி
30 தாராவி
31 பொது உறுப்பினர்கள் கூட்டம்
ஜன. 1 மாதுங்கா

அட்லி விலகினார்

20 ஆண்டுத் தொழிற் கட்சித் தலைமைப் பதவியைத் துறந்தார்

லண்டன், டிச 8—

72 வயது நிரம்பியவரும், 1951 முதல் 1954-ம் ஆண்டு வரையில் பிரிட்டிஷ் முதலமைச்சராக இருந்தவருமான கிளெமெண்ட் அட்லி அவர்கள், கடந்த 20 ஆண்டுகளாகத் தாம் வகித்துவந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டு தொழிற் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து நேற்று முதல் விலகிக்கொண்டார்

அப்பதவியிலிருந்து அவர் விலகிக் கொண்டதால், தலைவர் பதவிக்குப் பலத்த போட்டிகள் இருக்குமெனக் கூறப்படுகிறது.

அட்லிக்கு 'பிரபு' பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

புயல் நிவாரணம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்கும் துணி அனுப்பிவைக்குமாறு தந்தி கொடுத்ததாகவும், நேரு அவர்கள் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் இராணுவச் சட்டைகள் அனுப்பியிருப்பதாகத் தந்திகொடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

"சென்னை மக்கள் அடங்கிய இந்தக் கூட்டம் தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் புயல், வெள்ளம் ஆகியவைகளால் பாதிக்கப்பட்டோருக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன் 'புயல் நிவாரண நிதிக் குழு' என்ற பெயரால் ஒரு குழு நியமிக்கிறது. இந்த முயற்சிக்கு பொதுமக்கள் ஆதரவளித்து நிதி உதவ வேண்டும்."

என்ற தீர்மானத்தை செட்டி நாட்டரசர் முத்தையா செட்டியார் முன்மொழிந்து பேசினார்.

இதனை வழிமொழிந்து சென்னை மேயர் வி. ஆர். இராமநாதய்யர் பேசினார்.

பிறகு தோழர்கள் எம். ஏ. சிதம்பரம் செட்டியார், மேரி கிளப்வாலா ஜாதேவ், எம். ஆர். வெங்கடராமன், எச். டி. ராஜா, டாக்டர் யு. கிருஷ்ண ராவ், கே. ஏ மதியழகன் ஆகியோர் பேசினார்கள்

கூட்டத்தில் ரூபாய் இருபத்திநாலாயிரம் நிதி வசூலிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தலைவரின் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

தி.மு.க. மாநில மாநாட்டு நிதிக்காக

10—12—1955 சனி மாலை 6 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில்

நடிப்புப் புலவர்

கே. ஆர். ராமசாமி — பாட்டு

தஞ்சை கோவிந்தராசன் — வயலின்

தஞ்சை டி. பி. நாகராசன் — மிருதங்கம்

மன்னார்குடி ஆறுமுகம் — கஞ்சிரா

நன்கொடை: ரூ. 2, 1

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

பாரத் இன்ஷ்யூரன்ஸ்......

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"இராமகிருஷ்ண டால்மியாவினால், அண்மையில் புதிதாக இரண்டு டிரஸ்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த டிரஸ்டுகள் ஒவ்வொன்றின் மொத்த மூலதனம் ரூ. 10,000 தான். ஆனால் அவைகள், கூட்டுப் பங்கு முறையில், இலட்சக் கணக்கில் சம்பாதிக்கின்றன. 'டிரஸ்ட்' என்ற பெயரில் ஒரு கூட்டுக் கம்பெனியை நிறுவிக் கொள்வதற்கு இது ஒரு நல்ல முறையாக அமைந்து விட்டிருக்கிறது; இந்த டிரஸ்ட்டுகள் எல்லாம் இந்தத் தொகையை எப்படி அடைந்தன என்பதை சர்க்கார் கண்டுபிடித்தாக வேண்டும்.

"எனவே சென்ற 1945-ம் ஆண்டிலிருந்து இன்று வரையிலும் உள்ள டால்மியா—ஜெயின் கூட்டு விவகாரத்தை விசாரிக்க, முழு அதிகாரம் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும்."

—இவ்வாறு, உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினரான பெரோஸ் காந்தி, மக்கள் சபையில், இன்ஷ்யூரன்ஸ் சட்டத் திருத்த மசோதாமீது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

100 நிமிட நேரம் மக்கள் சபையில் பேசிய அவர், பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் விவகாரத்தை மிக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினார். அத்துடன் பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி பங்குதாரராகச்சேர்ந்துள்ள மற்ற கம்பெனிகளில் உள்ள பங்குத் தொகை குறித்தும் விளக்கினார்.

உடனே சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கும், மற்ற கம்பெனிகளுக்குமிடையேயுள்ள தொடர்பை தெரிவிக்குமாறு அவரைத் திரும்பத் திரும்பக் கேட்டார்.

இந்த விதமான டிரஸ்டுகள் இரண்டின் பெயரையும் பேரோஸ் காந்தி குறிப்பிட்டார். அவை இரண்டும் டால்மியாவினால் ஏற்படுத்தப்பட்டவைகள்; ஆனால், அந்த டிரஸ்டுகளைச் சேர்ந்தவர்கள் பெயரை அவர் கூற மறுத்துள்ளார்.

டிரஸ்டுகளின் பெயர்களைப் பதிவு செய்யவேண்டியிருப்பதால் எவ்விதத் தடங்கலுமின்றி அப்பெயர்களைக்கூறுமாறு ரெவினியூ, பாதுகாப்புச் செலவு அமைச்சர் கேட்டுக்கொண்டும் கூட அவர் மறுத்துவிட்டிருக்கிறார்.

பெராஸ் காந்தியின் பேச்சு முடிவுற்றதும், சில எதிர்க்கட்சி உறுப்பினர்களும், சுயேச்சை உறுப்பினர்களும் அந்த டிரஸ்டுகளின் பெயரை சர்க்கார் தெரிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றனர்.

ஆனால் துணை சபாநாயகர் அனந்தசயனம் அய்யங்கார் அந்தப் பெயர்களைத் தெரிவிக்கவேண்டுமென்று சர்க்காரையோ, அல்லது பெரோஸ் காந்தியையோ தம்மால் வற்புறுத்த முடியாது என்றும், உறுப்பினர்களே தங்களுக்குத் தேவையானால் அதனைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறார்.

மைசூரைச் சேர்ந்த குருபாதசாமி எம். பி. (ம. சோ. உறுப்பினர்) பேசும்போது, மிகுந்த தைரிய மனப்பான்மையுடன் இது விஷயத்தில் நிதி அமைச்சர் முன் வந்து, இது பற்றி ஆராய்ந்து அரிய விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

(இது பற்றிய மேற்கொண்ட விவாதங்களும், அமைச்சர்களின் பதிலும், சபையின் முடிவும் நாளை வெளிவரும்)

கம்யூனிஸ்டுகளின் ஜனநாயக நம்பிக்கை

கர்னூல், டிச. 6—

ஆந்திர சட்ட சபையில் பஞ்சாயத்து மசோதா விவாதிக்கப்படுகையில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் 'கம்யூனிஸ்டுகளுக்கு ஜனநாயகத்திலும், ஜனநாயக வழிமுறைகளிலும் எவ்வளவு நம்பிக்கை இருக்கிறது?' என்று கேட்டார்.

உடனே கம்யூனிஸ்டுத் தலைவரான சுந்தரய்யா, 'எங்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருப்பதாக காங்கிரசார் எண்ணுகின்றனரோ அது போல நான்கு மடங்கு,' என்று பதில் கூறினாராம்.

கொண்டையா என்ற வேறொரு காங்கிரஸ்காரர் எழுந்து, 'எங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை 'பூஜ்யம்' என்று நாங்கள் நினைக்கிறோம்; அப்படியானால், 'நான்கு பூஜ்யங்'கள் சேர்த்தால் ஒரு பெரும் பூஜ்யமாகும்; அவ்வளவு தான்,' என்று குறிப்பிட்டாராம்!

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு சர்க்கார் உதவியுடன் வீடு கட்டித் தரும் திட்டத்தின் கீழ், இந்திய சர்க்கார், பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு, 1955 அக்டோபர் கடைசி வரையில் மொத்தம் ரூ. 20,49,00,000 வரை கடன் தொகை வழங்க அனுமதியளித்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.